# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க,
## தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 80.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# 2025 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க,
# தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டம்

[2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 33/2012

**தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தைத் தாபிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கு மானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்

பாகம் I

## தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தைத் தாபித்தல்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தைத் தாபித்தல்

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதனது கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

**3.** நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:- நிறுவகத்தின் குறிக்கோள்கள்

(அ) மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடிய இடப்பரப்பு களில் அல்லது புவித்தொழினுட்ப நிலையுறுதி யின்மையான நிலங்களிலும் அவற்றின் தாக்கத்தை மிகக்குறைவாக்கும் நோக்குடன் ஆராய்ச்சியையும் ஆய்வுகளையும் நடாத்துதலும்

PL 15412 - 588 (2025/08)

ஊக்குவித்தலும், நிலைபெறுதகு முறையொன்றில் அத்தகைய இடப்பரப்புகளை அபிவிருத்தி செய்தலும்;

(ஆ) 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட நிர்மாணத்தின் மீதான தேசியக் கொள்கைக்கும் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட பேரழிவு களைச் செயலாட்சிசெய்தல்மீதான தேசியக் கொள்கைக்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கும் இணங்க மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடிய இடப் பரப்புகளில் அல்லது புவித்தொழினுட்ப நிலை யுறுதியின்மையான நிலங்களில் பேரழிவுக்கு நிலைமீள்வாற்றலுடைய ஒருமுறையில் நிர்மாண மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் நடாத்தப்படு வதனை உறுதிப்படுத்துதலும், தொடர்புபட்ட தொழினுட்ப உதவியை வழங்குதலும்; அத்துடன்

(இ) பேரழிவுக்கு நிலைமீள்வாற்றலுடையதாகக் கட்டப்பட்ட சூழலை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புபட்ட ஆராய்ச்சி வேலையைப் பொறுப் பேற்றல்.

நிறுவகத்தின் தத்துவங்கள்

**4.** நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண் டிருத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய இயைபான அதிகாரசபையினால் செய்யப்பட்ட வேண்டுகோளின் மீது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட நிர்மாணத்தின்மீதான தேசியக் கொள்கைக்கும் மற்றும் இயைபான அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கை யின்மீது 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட பேரழிவு செயலாட்சி மீதான தேசியக் கொள்கைக்கிணங்க காப்பான அபிவிருத்தி மற்றும் நிர்மாணச் செயல்முறைகள் என்பவற்றின் மீது இயைபான அதிகாரிகளுக்கு உதவுதலும்;

(ஆ) மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டறிக்கையுடன் அல்லது புவித்தொழினுட்ப நிலையுறுதி மதிப் பீட்டறிக்கையுடன் இணங்கியொழுகுகின்ற

மையைக் கண்காணித்தலும் சரிபார்த்தலும் இச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் நியதிகளின்படி இசைந்தொழுகுகைச் சான்றிதழை வழங்குதலும்;

(இ) மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடிய இடப் பரப்புகளினுள் அல்லது புவித்தொழினுட்ப நிலையுறுதியின்மையான நிலங்களினுள் மனித உயிருக்கு, ஆதனத்துக்கு மற்றும் சூழலுக்கு அபாயமேற்படுத்துகின்ற ஏதேனும் நிர்மாண அல்லது அபிவிருத்திச் செயற்பாடுமீது இயை பான அதிகாரிகளுக்கு உதவுதலும்;

(ஈ) பேரழிவு ஆபத்துக் குறைப்புத் திட்டமிடுதலையும் செயல்முறைகளையும் வகுத்தமைத்தல்;

(உ) தொழினுட்ப மதியுரைக் குழுக்களை நியமித்தல்;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தலும் வைத் திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனைசெய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(எ) நிறுவகத்தின் செயற்பாடுகளுக்காக அவசியமான நிபுணத்துவம், அறிவு, திறன்கள் மற்றும் அனுபவத்துடனான எவரேனுமாட்களைத் தொழிலுக்கமர்த்துதலும், வாடகைக்கமர்த்துதலும் அல்லது அவர்களின் சேவைகளை பெற்றுக் கொள்ளுலும்;

(ஏ) நிறுவகத்தினால் வழங்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கட்டணங்களை அல்லது வேறெவையேனும் கொடுப்பனவுகளை விதித்தல்;

(ஐ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக் களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல்:

ஆயின், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சபை எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும், கொடைகளும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ஒ) இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவகத்தில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்;

(ஓ) தோதானதெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் நிறுவகத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை ஏதேனும் வங்கியிலும் ஏதேனும் நிதி நிறுவகத்திலும் முதலீடுசெய்தல்;

(ஔ) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் புரிதலும்; அத்துடன்

(க) சபையினால் அதிகாரமளிக்கக் கூடியவாறான நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவாகவிருக்கக்கூடிய அல்லது அதன் இடைநேர்விளைவாகவிருக்கக்கூடிய அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

நிறுவகத்தின் பணிகள்

**5.** நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) மண்சரிவு ஆபத்து முகாமைக்கான தேசிய மையப்புள்ளியாக 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சிக்கான தேசியப் பேரவையின் தொழினுட்பத் தன்மையொன்றின் பணிகளுக்கு உதவுதல்;

(ஆ) மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடிய இடப்பரப்புகளை அல்லது புவித்தொழினுட்ப

நிலையுறுயின்மையான நிலங்களை நுண்ணாய்வு செய்தலும், அடையாளங்காணுதலும், படம் வரைதலும், ஏற்புத்திறன் மட்டங்களை எல்லை குறித்தலும், இடையூறு வலயப்படுத்தற் படங்களைத் தயாரித்தலும்;

(இ) ஆட்களை வெளியேற்றுதல் நோக்கத்துக்காக மண்சரிவு நிகழக்கூடிய ஆபத்துள்ளவோர் இடப்பரப்பை ஒரு “மண்சரிவு அபாய வலயமாக” அடையாளங்காணுதலும் வெளிப்படுத்துதலும்;

(ஈ) மண்சரிவுகள் காரணமாகத் தாக்கங்கள் நிகழக்கூடிய இடப்பரப்புகளுக்கு முற்கூட்டிய எச்சரிக்கையை வழங்குதல்;

(உ) மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடிய இடப் பரப்பில் நடாத்தப்பட்ட எவ்வகையினதுமான நிர்மாண அல்லது அபிவிருத்திச் செயற்பாட்டுக் காக மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டறிக்கையை வழங்குதல்;

(ஊ) மண்சரிவுகள் பற்றிய ஆராய்ச்சியையும் ஆய்வுகளையும் நடாத்துதலும் மண்சரிவுகள் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் கண்காணித்தலும் மண்சரிவுடன் இணைந்த ஆபத்துக்களைக் குறைப்பதற்காக தணிக்கும் வழிமுறைகளை வடிவமைத்தலும் நடைமுறைப் படுத்துதலும்;

(எ) மண்சரிவுகள் காரணமான சமூக, பொருளாதார மற்றும் சூழல்சார் தாக்கங்களை குறைப்பதற்கு முன்னோக்க அறிவியற்சார் தீர்வுகளை வழங்குதல்;

(ஏ) மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடிய ஓர் இடப்பரப்பில் அல்லது புவித்தொழினுட்ப நிலையுறுதியின்மையான நிலங்களில் காணிப் பாவனைத் திட்டங்களைத் தயாரிப்பதில் இயைபான அதிகாரசபைகளுக்கு உதவுதலும்;

(ஐ) புவித்தொழினுட்ப புலனாய்வுகளைப் புரிதலும் நிலச் சீராக்கம் மற்றும் சாய்வு

நிலையுறுதிப்படுத்துகை வழிமுறைகள்பற்றித் தொழினுட்பச் சேவைகளை வழங்குதலும்;

(ஒ) புவித்தொழினுட்பரீதியில் பிரச்சினைக்குரிய நிலங்களில் நிர்மாணம் தொடர்பான ஆராய்ச்சியை நடாத்துதலும் தொடர்புபட்ட தொழினுட்ப உதவியை வழங்குதலும்;

(ஓ) புவித்தொழினுட்ப புலனாய்வுகளின் நோக் கெல்லையையும் மற்றும் பொறியியற் பிரயோகங்களுக்கான வடிவமைப்பையும் விதித்துரைப்பதற்கு அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ஔ) அகழ்வுக்கான அல்லது நிர்மாணத்துக்கான நிலையுறுதி பற்றிப் புவித்தொழினுட்ப நிலையுறுதி மதிப்பீட்டறிக்கைகளை வழங்குதல்;

(க) புவித்தொழினுட்ப நுண்ணாய்வுகள் தொடர்பான எல்லாத் தகவல்களினதும் வைப்புக் காப்பாளராகப் பணியாற்றுதல்;

(ங) பேரழிவு நிலைமீள்வாற்றல் நிர்மாணத்தின் மீது ஆராய்ச்சியை நடாத்துதலும் தொடர்புபட்ட தொழினுட்ப உதவியை வழங்குதலும்;

(ச) தொடர்புபட்ட தொழினுட்பத் தீர்வுகளை வழங்குவதற்கெனச் சூழலிலான இரசாயன, பௌதிக மற்றும் உயிரியியற்சார் மாற்றங்களை மதிப்பீடுசெய்தல்;

(ஞ) கட்டிடங்களின் இருப்பாட்சியாளர் அல்லது சொந்தக்காரர் என்போரின் வேண்டுகோளின் மீது கட்டமைப்பு, இருப்பாட்சி, மின்வலு மற்றும் சூழல் மீது அடிப்படையான கட்டிடங்களை மதிப்பீடுசெய்தலும் தொழினுட்ப உதவியை வழங்குதலும்;

(ட) நிர்மாண நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்ட பொருட்கள், தயாரிப்புகள் மற்றும் தொழினுட்பவியல்கள் மீதும் அவற்றின் பொருத்த மாந்தன்மைபற்றி ஆராய்ச்சியை நடாத்துதல்;

(ண) கட்டிடத்தின் இருப்பாட்சியாளர் அல்லது சொந்தக்காரர் வேண்டுகோளின்மீது கட்டிடங் களிலும் கட்டமைப்புக்களிலும் பேரழிவு நிலை மீள்வாற்றல் வடிவமைப்பினதும் நிர்மாணச் சிறப்புக்கூறுகளினதும் சேத, காப்பு மற்றும் சேர்க்கை நிலைமைகள் பற்றி புலனாய்வு செய்தலும் கட்டமைப்புச்சார் காப்புப்பற்றித் தொழினுட்பவியல்சார் தீர்வுகளை வழங்குதலும்;

(த) இயைபான அதிகாரசபைகளினால் செய்யப் பட்ட கோரிக்கையின்மீது, நிர்மாண மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் கொள்கை, வழிகாட்டுநெறிகள், அளவுக் குறிப்பீடுகள் மற்றும் நியமங்களின் அபிவிருத்தியில் அத்தகைய இயைபான அதிகாரிகளுக்கு உதவி வழங்குதல்;

(ந) விழிப்புணர்ச்சி உருவாக்கம், பயிற்சி மற்றும் தொழினுட்பவியற் கைமாற்றம் என்ப வற்றினூடாக நிறுவகத்தின் நிபுணத்துவத் துறைகளில் அறிவியற்சார் அறிவையும் தகவல் களையும் பரப்புதல்; அத்துடன்

(ப) சபையின் அங்கீகாரத்துக்கமைய ஆராய்ச்சி மற்றும் அளவிடுதல்களை நடாத்துவதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அக்கறை கொண்டுள்ளோருடன் உடனுழைத்தலும், சேகரிக்கப்பட்ட தரவு மீதான இரகசியதன்மையை பேணிக்கொண்டு ஆக்கவுரிமைகளின் மீதான எழுத்திலான சட்டங்களுக்கமைய அத்தகைய ஆராய்ச்சியின் மற்றும் அளவிடுதல்களின் பெறுபேறைப் பரப்புதலும்.

பாகம் II

**நிறுவகத்தின் நிருவாகமும் முகாமையும்**

நிறுவகத்தின் ஆளுநர்கள் சபையை அமைத்துருவாக்குதல்

**6.** (1) நிறுவகத்தின் அலுவல்களினது நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு என்பன (இச்சட்டத்தில் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் ஆளுநர்கள் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது:-

(i) பேரழிவுச் செயலாட்சி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அவர் சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்;

(ii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசை யிலுள்ள அவரது பிரதிநிதி;

(iii) உள்ளூராட்சி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(iv) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சி நிலையத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவர்களும் (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப் பினர்கள்” எனக் குறிப்பீடுசெய்யப்படுபவர் களுமான) பின்வரும் உறுப்பினர்கள்-

(i) வீடமைப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலா

ளரினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டவரும் பேரழிவு நிலைமீள்வாற்றல் என்ற துறையில் ஐந்தாண்டுக்கு குறையாத அனுபவத்தையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிகளில், அதாவது, பொறியியல், புவியியல், சூழல்சார் அறிவியல், கட்டிடக்கலை அல்லது நகர அபிவிருத்தி என்பவற்றில் பட்டப்பின் தகைமைகளையும் கொண்டுள்ள ஓராள்;

(ii) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிகளில், அதாவது, பொறியியல், புவியியல், சூழல்சார் அறிவியல், கட்டிடக்கலை அல்லது நகர அபிவிருத்தி என்பவற்றில் பட்டப்பின் தகைமைகளைக் கொண்டிருக்கின்ற கல்விமான்களிடையேயிருந்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஒரு கல்விமான்; அத்துடன்

(iii) 2019 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நிர்மாணத்தொழில் பணிமனை (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை, நிர்மாணத்தொழில் பணிமனையினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டவரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாட நெறிகளில், அதாவது, பொறியியல், புவியியல், சூழல்சார் அறிவியல், கட்டிடக்கலை அல்லது நகர அபிவிருத்தி என்பவற்றில் பட்டப்பின் தகைமைகளைக் கொண்டிருக்கின்றவரும் உள்நாட்டுப் புவித்தொழினுட்பப் பொறியியல் அல்லது கட்டிட நிர்மாணத்தொழிலில் நிபுணத்துவத்தையுடையவருமான ஓர் உயர்தொழிலர்.

(2) இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் செயலாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் சபையின்

ஏதேனும் கூட்டத்திலும் வாக்களிப்பதற்கு உரித்துடைய வராதலுமாகாது.

(3) சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக இச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக் கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

சபையின் உறுப்பினரொரு வரக இருப்பதி லிருந்தான தகைமை யீனங்கள்

**7.** ஆளொருவர் பின்வருமாறிருப்பின், சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது சபையின் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், ஒரு பாராளுமன்ற உறுப்பினராக, ஏதேனும் மாகாணசபையின் உறுப்பினரொருவராக அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் உறுப்பின ரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இராதிருந்தால் அல்லது இராதொழிந்தால்;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(ஈ) அவர், இலங்கையில் அல்லது வேறே தேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவரென அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக இருந்தால்;

(உ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஒரு மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(ஊ) அவர், நிறுவகத்தினால் அல்லது அதன்சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ்

ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(எ) அவர், சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகள் அவரினால் நிறைவேற்றப் படுவதனைப் பாதிக்கக்கூடிய சாத்தியங் கொண்டவாறான எவையேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறைகளைக் கொண்டிருந்தால்.

சபையுறுப்பினர் களின் பதவிக்காலம்

**8.** சபையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், இறப்பின் மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியி லிருந்து அகற்றப்படுவதன்மூலம் அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலமொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவியை வறிதாக்குதல்

**9.** (1) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(2) அமைச்சர், பின்வரும் சந்தர்ப்பங்களில், நியமிக் கப்பட்ட எவரேனும் உறுப்பினரை, அவருக்கு முகவரியிட்டனுப் பப்படும் எழுத்திலான தொடர்பாடல் மூலம், பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்-

(அ) ஏழாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான எவையேனும் தகைமையீனங்களுக்கு அவர் அமைந்தவராக வந்தால்;

(ஆ) அமைச்சரின் அபிப்பிராயத்தில், ஏதேனும் உடல்ரீதியிலான இயலாமை அல்லது சித்தசுவா தீனமின்மை காரணமாக அவரது கடமைகளைப் புரிவதற்கு அவர் நிரந்தரமாக இயலாதவராக வந்தால்; அல்லது

(இ) அமைச்சரின் அபிப்பிராயப்படி, நிறுவகத்தை அவமதிப்புக்குட்படுத்தக்கூடிய சாத்தியங் கொண்ட ஏதேனும் செயலை அவர் செய்தால்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எழுத்திலான தொடர் பாடலொன்று எந்த நியமிக்கப்பட்ட உறுப்பினருக்கு முகவரியிட்டனுப்பப்படுகின்றதோ அந்த எவரேனும் நியமிக் கப்பட்ட உறுப்பினர் அத்தகைய தொடர்பாடலில் குறித்துரைக்

கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(4) பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள எவரேனும் நியமிக் கப்பட்ட உறுப்பினர், சபையினது உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது வேறேதேனும் தகமையில் நிறுவ கத்துக்குச் சேவையாற்றுவதற்குத் தகவுடைய வராதலாகாது.

(5) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரால் பதவி வறிதாக்கப்படுவதன்மேல், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள பொருத்தமான எவரேனு மாளை அமைச்சர் நியமிக்கலாமென்பதுடன் அத்தகைய ஆள், அவர் எந்நியமிக்கப்பட்ட உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கு இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள தகைமைகளைக்கொண்ட பொருத்தமான எவரேனுமாளை நியமிக்கலாம்.

சபையுறுப்பினர் களுக்கான ஊதியம்

**10.** சபையுறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச் சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஊதியம் அல்லது படி என்பன செலுத்தப்படுதல் வேண்டும்.

சபைக்கூட்டங் களிலான கூட்டநடப்பெண்

**11.** (1) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் நான்காதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங் களில் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் எழுகின்ற ஏதேனும் கேள்வி சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை யோரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வாக்குகள் சமமாயிருக்கும் சந்தர்ப்பத்தில், தவிசாளர் இரண்டாவது அல்லது அறுதியிடும் வாக்கொன்றை உடைய வராகவிருத்தலும் வேண்டும்.

(4) சபையுறுப்பினர்களின் எண்ணிக்கை சபையின் கூட்ட மொன்றுக்கான கூட்டநடப்பெண்ணாக அமைவதற்குப் போதியதாகவிருக்கும் வரை, சபையில் வெற்றிடமொன்று எது எவ்வாறிருப்பினும், சபையானது செயலாற்றலாம்.

ஏதேனும் காணியினுட் பிரவேசிப்பதற்கும் அதனைச் சோதனையிடு வதற்கும் சபையின் தத்துவம்

**12.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சபையின் உறுப்பினர் ஒருவர், அல்லது சபையினால் எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட தொழினுட்ப அலுவலர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவருமான அலுவலர் ஒருவர், ஒரு காணியின் சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சி யாளரினால் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல் அத்தகைய காணியினுட் நுழையலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபையின் உறுப்பினரொருவர் அல்லது சபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு தொழினுட்ப அலுவலர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத ஓர் அலுவலர், ஒரு மண்சரிவு ஏற்படுவதற்கான உடனடி ஆபத்துள்ளதென அத்தகைய உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு முன்னருள்ள முக்கியமான நிகழ்வுகள் பற்றி தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுமிடத்து, அத்தகைய காணியின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் சம்மதத்துடன் பொலிசு அலுவலருடன் ஒரு காணியினுட் பிரவேசித்தல் அத்தகைய உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) அவ்வுறுப்பினர் அல்லது அலுவலர், அவசியமான வாகனங்களுடனோ, சாதனங்களுடனோ அல்லது கருவிகளுடனோ அல்லது அவையின்றியோ ஏதேனும் காணியினுட் பிரவேசிக்கலாம் என்பதுடன் அக்காணியைச் சோதித்து, அதன்கண்ணுள்ள மண்ணின் ஏதேனும் மாதிரியை எடுக்கலாம் அல்லது ஏதேனும் மதிப்பீட்டை அல்லது பரீட்சிப்பை நிறைவேற்றலாம்.

(4) அத்தகைய காணியின் சொந்தக்காரர் அல்லது இருப் பாட்சியாளர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு நியாயமான எல்லா உதவிகளையும் அளித்தல் வேண்டும்.

சபையின் தத்துவங்களைக் கையளித்தல்

**13.** (1) சபையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, விடயத் துக்கேற்ப, 4 ஆம் பிரிவின் பந்திகள் (உ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ) மற்றும் (க) என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் தவிர்ந்த, அதன் தத்துவங்களுள் எவற்றையும் சபையின் தவிசாளருக்கு, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, தொழினுட்ப மதியுரைக் குழுவுக்கு, அல்லது 4 ஆம் பிரிவின் (எ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனு மாளுக்குக் கையளிக்கலாமென்பதுடன் தவிசாளர், பணிப்பாளர் தலைமையதிபதி, தொழினுட்பமதியுரைக் குழு, அல்லது 4 ஆம் பிரிவின் (எ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாள், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக் கமைய அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

சபையானது அமைச்சரின் பணிப்புகளின்கீழ் அதன் தத்துவங் களைப் பிரயோகித் தலும் அதன் பணிகளை நிறைவேற்றுலும்

**14**. அமைச்சர், காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித் தலும் நிறைவேற்றுதலும் தொடர்பாக அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை அதற்கு வழங்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கி யொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

நிறுவகத்தின் இலச்சினை

15. நிறுவகத்தின் இலச்சினையானது –

(அ) சபையானது காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக் காப்பிலிருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலை யிலன்றி ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற் கத்தாட்சியாக அந்த ஆவணத்தில் அல்லது சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப் பமிடுதல் வேண்டும்.

பாகம் III

**நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர்**

நிறுவகததின் பணிப்பாளர் தலைமையதிபதி

**16.** (1) அமைச்சர், சபையுடனான கலந்தாலோசனையுடன், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படவேண்டியதான தகைமைகளையும் அனுபவத்தையும் உடைய பொறியியல், அறிவியல் அல்லது தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கீர்த்தியை எய்தியுள்ளவர்களுமான ஆட் களிடையேயிருந்து (இதனகத்துப்பின்னர் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி, நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியின் வேதனாதிகள், அரசாங்கத்தின் ஏற்புடையற்பாலனவான வழிகாட்டு நெறிகளுக்கிணங்க நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சபையினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புக்கமைய, நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நிருவாகமும் முகாமையும் உட்பட, நிறுவகத்தின் அலுவல்களினது முகாமைக்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டும்.

(5) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி என்ற பதவியை வகிக்கின்ற ஆள், இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவி அகற்றுகைமூலம் அத்தகைய ஆள் அத்தகைய பதவியை வறிதாக்கினாலொழிய, ஓய்வுபெறும் வயதுவரை அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும். ஓய்வுபெறும் வயதானது, அரசாங்கத்தின் ஏற்புடையாற்பாலனவான வழிகாட்டுநெறிகளுக்கிணங்கச் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங் களுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி, (5) ஆம் உட்பிரிவின்கீழ் இறப்பின்மேல், பதவி அகற்றுகையின்மேல் அல்லது பதவியிலிருந்து ஓய்வுபெறுவதன்மேல் அல்லது அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் வறிதாதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனமொன்று செய்யப்படும்வரை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப் பதற்கும் நிறைவேற்றுவதற்கும் (1)ஆம் உட்பிரிவிற் குறித் துரைக்கப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்ட நிறுவகத்தின் அலுவலரொருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

பணிப்பளர் தலைமையதிபதி அவரது தத்துவங்களை அல்லது பணிகளைக் கையளித்தல்

**17.** பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தினால் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிப்பது அவசியமென அவர் கருதும்போதெல்லாம் சபையின் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்யலாம்

என்பதுடன் அத்தகைய அலுவலர், பணிப்பாளர் தலைமை யதிபதியின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அத்தகைய தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:

ஆயின், 13ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்பட்ட தத்துவம் அல்லது பணி எதுவும் இப்பிரிவின்கீழ் கையளிக்கப்படுதலாகாது.

நிறுவகத்தின் பணிப்பாளர்கள்

**18.** (1) நிறுவகத்தின் தனிவேறான பிரிவுகளுக்குப் பொறுப்பாகவிருப்பதற்குச் சபையானது நிறுவகத்தின் பணிப்பாளர்களை நியமிக்கலாம். அத்தகைய தொழிலின் நியதிநிபந்தனைகள் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் காலத்துக்குக்காலம் குறித்தளிக்கப்பட்ட அவர்களின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

அலுவலர்களை யும் ஊழியர் களையும் நியமித்தல்

**19.** (1) நிறுவகத்தின் தத்துவங்களையும் பணிகளையும் வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுதலும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் சபையானது நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர் களினதும் ஊழியர்களினதும் ஊதியம், தகவுடைமைக் கட்டளைக்கற்கள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் உட்பட்ட தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், அரசாங்கத்தின் தொடர்புபட்ட வழிகாட்டுநெறிகளுக்கிசைய சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) சபையானது, எவ்வாறாயினும், பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனும் ஆளினால் வகிக்கப்பட்ட முன்னைய ஏதேனும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள அத்தகைய ஆளை நிறுவகத்தின் அலுவலர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக நியமித்தலாகாது.

பகிரங்க அலுவலர்களை நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்

**20.** (1) நிறுவகத்தின் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசியலமைப்பின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக் கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலரை நிறுவகம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அத்தகைய அலுவலரினால் நிறுவகத்துக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பாகம் IV

## நிதி

நிறுவகத்தின் நிதியம்

**21.** (1) நிறுவகம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பின்வருவன நிறுவகத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) நிறுவகமானது அதன் தத்துவங்களையும் பணி களையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுதலும் அதனாற் பெறப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) 4 ஆம் பிரிவின் (ஐ) என்னும் பந்தியின் நியதிகளின்படி இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, எவையேனும் மூலங்களிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்.

(2) நிறுவகமானது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுதலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**22.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக் களும் பொறுப்புக்களும் மற்றும் அதன் வேறெல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை நிறுவகம் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம்

உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை

**23.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், நிறுவகத்தின் நிதிசார் கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

## பொது ஏற்பாடுகள்

மண்சரிவுகள் ஆபத்து மதிப்பீட்டறிக்கை முதலியவற்றை வழங்குதல்

**24.** (1) மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டறிக்கை அல்லது புவித்தொழினுட்ப நிலையுறுதி மதிப்பீட்டறிக்கை, எவரேனுமாளினால் செய்யப்பட்ட கோரிக்கையின்மீது நிறுவகத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிக்கைக்கு இணங்கியொழுகுவதனைக் கண்காணிக்கும்படி ஏதேனும் இயைபான அதிகாரசபை நிறுவகத்துக்குக் கோரிக்கைவிடுக்குமிடத்து, நிறுவகமானது, அத்தகைய அறிக்கைக்கு இணங்கியொழுகுதலைக் கண்காணித்து அத்தகைய இயைபான அதிகாரசபைக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் இசைந்தொழுகுகைச் சான்றிதழை வழங்குதலும் வேண்டும்.

காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் நிறுவகத்துக் காக காணியைக் கொள்ளுதல் அல்லது காணி மீதானவொரு செயலகம்

**25.** (1) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தின் அலுவலகத்தை நிர்மானிக்கும் அல்லது பேணும் நோக்கத்துக்காக ஏதேனும் காணி அல்லது ஒரு காணியின் மீதான ஏதேனும் சேவகத்தினை நிறுவகத்தினால் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கம், (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின் நோக்கத்துக்காக ஒரு பொது நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய காணி அல்லது சேவகம் நிறுவகத்திற்கென அரசாங்கத்தினால் காணி

கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாமென்பதுடன் காணி கொள்ளுதற் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கொள்ளுதலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) நிறுவகத்துக்காக (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் ஏதேனும் காணியை அல்லது சேவகத்தினை கொள்ளுவதற்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அரச காணி, நிறுவகத்தின் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் ஒரு விசேட அளிப்பு அல்லது குத்தகை செய்யப்படக்கூடியவொரு நோக்கமாகவுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அந்த ஆதனத்தின் விசேட அளிப்புக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

வருடாந்த அறிக்கை

**26.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் முடிவிலிருந்து ஆறு மாதங்களினுள் அவ்வாண்டின்போது நிறுவகத்தின் செயற்பாடுகள்பற்றிய முழு விபரங்களையும் கொடுக்கின்ற வருடாந்த அறிக்கை யொன்றை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) அமைச்சர் அத்தகைய அறிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் வருடாந்த அறிக்கையின் பிரதிகள் பாராளுமன்றத்தில் இடப்படுவதனை அமைச்சர் செய்வித்தல் வேண்டும்.

(3) அமைச்சர், காலத்துக்குக்காலம், வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்படுவதற்குத் தேவையாகவுள்ள கருமங்களை அல்லது அதில் சேர்க்கப்படவேண்டிய விபரங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

சபையின் எல்லா உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்

**27.** சபையின் எல்லா உறுப்பினர்களும், நிறுவகத்தின் அலுவலர்களும், ஊழியர்களும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிறுவகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படுதல்

**28.** நிறுவகமானது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

செலவுகள், நிறுவகத்தின் நிதியத்திலிருந்த செலுத்தப்படுதல்

**29.** (1) நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் நிறுவகத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் நிறுவகத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே நிறுவகத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினரொருவரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால், பணிப்பாளரொருவரினால், அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் அல்லது அவருக்கெதிராக, விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ் அல்லது அமைச்சரின் அல்லது சபையின் பணிப்பின்மீது அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அவரினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது மீறுகை தவறொன் றாதல்

**30.** இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**31.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படவேண்டுமோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்

**32.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்

உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கி என்று பொருளாகும்;

“கட்டிடங்கள்” என்பது, மனித இடங்கொள்ளலுக்கான வீடு, தொடர்மாடி அல்லது கூட்டாட்சியாதன மொன்றாக பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட அல்லது முழுமையாக நிர்மாணிக்கப்பட்ட நிர்மாணத்தின்கீழாக கட்டமைப்பு ஒன்று அல்லது ஒன்றில் இடங்கொண்டுள்ள அல்லது வெற்றிடமானதொரு நிலையிலுள்ள அனர்த்த முகாமையில் பயன்படுத்தப்படும் மீள்குடிய மர்வுக்கான வீடொன்று அல்லது வெளியேற்றுதல் நிலையம் அல்லது பாடசாலையொன்று கல்விசார் நிறுவனமொன்று, விடுதியொன்று, மண்டபமொன்று, வழிபாட்டிடமொன்று, கடையொன்று, கடைத்தொகுதியொன்று, தொழிற்சாலையொன்று அல்லது வர்த்தக அக்கறையிலான குதமொன்று அல்லது பொதுமக்கள் ஒன்றுகூடக்கூடிய ஏதேனும் அதையொத்த இடத்தை உள்ளடக்கும்;

“முற்கூட்டிய எச்சரிக்கை” என்பது, ஓர் இடையூறினால் அச்சுறுத்தலுக்குட்பட்ட தனியாட்களும் சமுதாயங்களும், தீங்கு அல்லது இழப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைப்பதற்குத் தயாராகித் தோதானமுறையிலும் போதிய நேரகாலத்திலும் செயலாற்றுவதனை இயலச்செய்வதற்கு நேரகாலத்துடனான மற்றும் அர்த்தமுள்ள எச்சரிக்கைத் தகவல்களைத் தோற்றுவித்துப் பரப்புவதற்கான நடைமுறை என்று பொருளாகும்;

“நிதி நிறுவகம்” என்பது, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழிற் சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு நிறுவகம் என்று பொருளாகும்;

“புவித்தொழினுட்ப நிலையுறுதியின்மை” என்பது, கீழ்ப்படைமண்களின் அமைப்பினது சூழ்நிலை களின் விளைவாக அல்லது சூழல்சார்

நிலைமைகளிலானவொரு மாற்றத்தின் விளைவாக ஒப்பீட்டளவில் குறைந்த அழுத்த நிலைமைகளின்கீழ் விரிவடைவதற்கும், வீழ்ச்சி யடைவதற்கும், சிதறடிக்கப்படுவதற்கும் அல்லது மிதமிஞ்சிய படிதலுக்கு உட்படுவதற்கும் அதன் மீது கட்டப்பட்ட கட்டிடங்களும் கட்டமைப்புக் களும் அழிந்துபோவதனை விளைவிப்பதற்கு மானஇயல்திறனைக்கொண்டதும்அக்கீழ்ப்படை மண்களினால் ஏற்படுத்தப்பட்டதுமான நிலை யுறுதியின்மை என்று பொருளாகும்;

"புவித்தொழினுட்ப நிலையுறுதி மதிப்பீட்டறிக்கை" என்பது, புவித்தொழினுட்ப நிலையுறுதிக் கரிசனைகள் தொடர்பான ஓர் ஆவணம், நிலச் சாய்வுக் கோணம் பற்றிய நிலஞ்சார்தொழினுட்ப மதிப்பீடு, புவிவரலாற்றியல்சார் மற்றும் புவித் தொழினுட்பப் பண்புகள், புவிவரலாற்றியல்சார் அமைப்பாக்கம், பாறைக்கல் தொடர்ச்சி யின்மைகளின் பண்புகள், மேற்பரப்பின்கீழான நீரின் செயற்பாடு, மேற்பரப்பு நீர் தேங்கிநிற்பதற்கான இயல்திறன் மற்றும் நீரகற்றலின் பயன் என்பனவற்றுக்கமைய, விடயமாகவுள்ள அமைவிடத்தை, அருகாமை யிலுள்ளஆதனங்களைமற்றும்உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தியைப் பங்கமானமுறையில் பாதிக்கக் கூடிய ஆழமான அகழ்வு, நிலக்கீழ் அகழ்வு, நிலச் சீராக்கல் வேலை, தக்கவைக்கின்ற கட்டமைப்புகள், அல்லது கீழ்க்கட்டமைப்பு நிர்மாண வேலை என்பவற்றை உட்படுத்துகின்ற ஏதேனும் நிர்மாண அல்லது அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பிலான பிரச்சினைகள் என்று பொருளாகுமென்பதுடன் தோதாகக்கூடியவாறு அவசியமானநிபந்தனைகள்,வழிகாட்டுநெறிகள், தொழினுட்ப மதியுரை மற்றும் தணிப்பு வழிமுறை களையும் உள்ளடக்கும்;

"இடையூறு வலயப்படுத்தற் படம்" என்பது, ஏற்புத்திறன் களின் வெவ்வேறு மட்டங்களைக் கொண்ட வலயங்களைச் சுட்டிக்காட்டி, இடையூறுகளுக்கு

இலக்காகக்கூடிய இடப்பரப்பை அடையாளங் காட்டித் தயாரிக்கப்படுகின்ற ஒரு படம் என்று பொருளாகும் என்பதுடன், மேலதிகமாக, வெளியகற்றல் மார்க்கங்களும் புகலிடங்களும் பற்றிய உருவரைகள் போன்ற குறிப்பிட்ட இடையூறுகள், பேரழிவு நிகழ்தகுதன்மையும் அதன் அடிக்கடியானதன்மையும் பற்றிய மதிப்பீடு, எச்சரிக்கை மற்றும் வெளியகற்றல் முறைமைகள், குடியிருப்புகளின் பரவல் என்பவற்றுடன் தொடர்புபட்ட தகவல்களையும், மற்றும் பேரழிவுடன் தொடர்புபட்ட வேறு அடிப்படைத் தகவல்களையும் கொண்டிருக்கலாம்;

“மண்சரிவு” என்பது, மனிதச் செயற்பாடுகள் காரணமாக அல்லது இயற்கைக் காரணிகளின் விளைவாக உருவாக்கப்பட்ட அல்லது உருவாக்கப்படவுள்ள நிலச் சரிந்தமிழ்வு உட்பட எவ்வகையினதுமான திரண்ம நகர்வு என்று பொருளாகும்;

“மண்சரிவு அபாய வலயம்” என்பது, ஒரு மண்சரிவுப் பேரழிவு உடனடியாக நிகழ்வதற்கான அபாயத்துக்கமைந்த குறிப்பிட்டவோர் இடப் பரப்பில் மனிதக் குடியிருப்புட்பட ஆட்களின் உயிர்களுக்கு அபாயமேற்படுத்தக்கூடியதாக அல்லது ஊறையும் ஆதனச் சேதத்தையும் விளைவிக்கக்கூடியதாக, அதன்கண் செயற் பாடுகள் இடம்பெறுவதனைத் தடுப்பதற்குக் குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கு நிறுவ கத்தினால் வெளிப்படுத்தப்படும் தவிர்க்கப்பட்ட வொரு வலயம் என்று பொருளாகும்;

“மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டறிக்கை” என்பது, மண்சரிவுகளுக்கு இலக்காகக்கூடியவோர் இடப்பரப்பில் ஏதேனும் நிர்மாண அல்லது அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பில் வழங்கப் பட்டவோர் ஆவணம் என்று பொருளாகு மென்பதுடன் தோதாகக்கூடியவாறு அவசியமான

வழிகாட்டுநெறிகளையும், தொழினுட்ப மதியுரையையும், தணிப்பு வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இச்சட்டம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்; அத்துடன்

"இயைபான அதிகாரசபைகள்" என்பது, ஒவ்வோர் அமைச்சையும், திணைக்களத்தையும், மாகாண சபையையும், மாகாண அமைச்சையும் மற்றும் திணைக்களத்தையும், உள்ளூரதிகாரசபையையும், மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காகக் கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டவையும் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்றவையுமான முகவராண்மைகளையும் உள்ளடக்கும்.

**33.** (1) அமைச்சரவையின் முடிபைப் பின்பற்றி (2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆந்தேதிய 07/0435/343/002 ஆம் இலக்க அமைச்சரவை முடிபு) தாபிக்கப்பட்ட தேசியக் கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பு, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக, நடைமுறையில் இல்லா தொழிதல் வேண்டும். பேணல்கள்

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தேசியக் கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பில் தொழிலிலிருந்தவர்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலுள்ளவாறு தத்தமது ஓய்வுபெறும் வயதுகளை எய்தியிராதவர்களுமான அத்தகைய ஒழுங்கமைப்பிலுள்ள எல்லா அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அவர்களுக்கு ஏற்புடையற்பாலனவாகவுள்ள தொழில் நியதி நிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தனவாகவிராத நியதிநிபந்தனைகளின்மீது, இச்சட்டம் தொடங்கும்

தேதியிலிருந்து பயனுறுவதாக நிறுவகத்தில் தொழில் முனையப்படுதல் வேண்டும்.

(ஆ) நிறுவகத்தின் தொழிலிலிருந்து விலகுவதற்கு விருப்புத்தெரிவிக்கின்றவரும், பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்டவருமான எவரேனும் அலுவலரும் ஊழியரும், அவருக்கு எத்தேதியன்று நிறுவகத்தில் தொழில் முனையப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் அவ்வாறு விலகலாம்.

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் முனைவை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான அவரது விருப்புத்தெரிவைப் பிரயோகித்தால், அமைச்சரினதும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினதும் அங்கீகாரத்துடன், அதற்கென நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தன்னிச்சை யான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் அவருக்கு நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**34.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.